தேவக்கிருபையும் சத்தியமும் ஒன்றையொன்று சந்திக்கும்



Mercy and Truth Have Met Together

Album 22 Song 4

Song 4 தேவக்கிருபையும் சத்தியமும் ஒன்றையொன்று சந்திக்கும்

Psalm 85 – Prayer for revival and restoration. Mercy and truth meet, righteousness and peace kiss. God's glory dwells in the land when He forgives His people.

தேவக்கிருபையும் சத்தியமும் ஒன்றையொன்று சந்திக்கும்
தேவநீதியும் சமாதானமும் ஒன்றையொன்று முத்தஞ்செய்யும்
தேவ சத்தியம் பூமியிலிருந்து முளைக்கும்
தேவநீதி வானத்திலிருந்து தாழப் பார்க்கும்

உமது தேசத்தின் மேல் பிரியத்தை ஆழமாக வைத்து
யாக்கோபின் சிறையிருப்பை நீர் திருப்பினீர்
உமது ஜனத்தின் அக்கிரமத்தை யெல்லாம் மன்னித்து
அவர்கள் செய்த பாவத்தை யெல்லாம் நீரே மூடினீர்

தேவக்கிருபையும் சத்தியமும் ஒன்றையொன்று சந்திக்கும்
தேவநீதியும் சமாதானமும் ஒன்றையொன்று முத்தஞ்செய்யும்
தேவ சத்தியம் பூமியிலிருந்து முளைக்கும்
தேவநீதி வானத்திலிருந்து தாழப் பார்க்கும்

KJC DNN

உமது உக்கிர கோபத்தை யெல்லாம் அடக்கிக் கொண்டீர்
உமது கோபத்தின் எரிச்சலை விட்டு நீரே திரும்பினீர்
உமது ஜனங்கள் உம்மில் மகிழ உயிர்பித்திடுமே
உமது கிருபையால் எங்களுக்கு இரட்சிப்பை அருளுமே

தேவக்கிருபையும் சத்தியமும் ஒன்றையொன்று சந்திக்கும்
தேவநீதியும் சமாதானமும் ஒன்றையொன்று முத்தஞ்செய்யும்
தேவ சத்தியம் பூமியிலிருந்து முளைக்கும்
தேவநீதி வானத்திலிருந்து தாழப் பார்க்கும்

உம்முடைய ஜனங்களுக்கு சமாதானத்தை கூறுகிறீர்
உம்முடைய பரிசுத்தர்களுக்கு சமாதானத்தைக் கொடுக்கிறீர்
அவர்களுடைய மதிகேட்டிற்குத் திரும்பாதிருக்கச் செய்யும்
அவர்கள் மேலுள்ள உமது கோபத்தை ஆறப் பண்ணிடும்

தேவக்கிருபையும் சத்தியமும் ஒன்றையொன்று சந்திக்கும்
தேவநீதியும் சமாதானமும் ஒன்றையொன்று முத்தஞ்செய்யும்
தேவ சத்தியம் பூமியிலிருந்து முளைக்கும்

தேவநீதி வானத்திலிருந்து தாழப் பார்க்கும்

எங்கள் தேசத்திலே தேவமகிமை என்றென்றும் இருக்கட்டும்
கர்த்தருக்கு பயந்தவர்க்கு இரட்சிப்பு சமீபித்திடும்
தேவன் தாமே அவர்களுக்கு நன்மையானதைத் தந்திடுவார்
எங்களது கடிதமும் அதன் பலனைக் கொடுத்திடும்

தேவக்கிருபையும் சத்தியமும் ஒன்றையொன்று சந்திக்கும்
தேவநீதியும் சமாதானமும் ஒன்றையொன்று முத்தஞ்செய்யும்
தேவ சத்தியம் பூமியிலிருந்து முளைக்கும்
தேவநீதி வானத்திலிருந்து தாழப் பார்க்கும்

எங்கள் தேசத்திலே தேவக்கிருபை என்றென்றும் இருக்கட்டும்
தேவநீதி கர்த்தருக்கு முன்னாகச் செல்லட்டும்
கர்த்தருடைய அடிச்சுவடுகளின் வழியில் எங்களை நிறுத்திடும்
கர்த்தராகிய தேவனின் விளம்புதலைக் கேட்டிடுவேன்

தேவக்கிருபையும் சத்தியமும் ஒன்றையொன்று சந்திக்கும்
தேவநீதியும் சமாதானமும் ஒன்றையொன்று முத்தஞ்செய்யும்
தேவ சத்தியம் பூமியிலிருந்து முளைக்கும்
தேவநீதி வானத்திலிருந்து தாழப் பார்க்கும்

KJC-DNN


KJC-DNN